# நாஞ்சியில் நான்

★


எழுதியவர்
சி. உமைதாணு
'தந்தி'
துணை ஆசிரியர்


●

விலை அணு 9


கலைபயில் கழகம் - திருவல்லிக்கேணி.

## அணிந்துரை.

'நாஞ்சியில் நான்' என்ற புத்தகத்தை ஒருமுறை படித்தேன் மறுமுறையும் திரும்பப் படித்தேன். இது என் சுபாவத்திற்கே விரோதம். ஏனென்றால் அநேகமாக எந்தப் புத்தகத்தையும் ஒரு முறைக்கு அதிகமாக நான் படிப்பதில்லை.

இந்தப் புத்தகத்தில் நான் லயித்ததற்குக்காரணம் என்னவென்றால், இது நாஞ்சி நாட்டைப்பற்றியது. துண்டு பட்டுப்போன நமது சொந்த நிலத்தைப்பற்றிய புத்தகம் இது. அதோடு நண்பர் உமைதாணுவின் அழகான தமிழ் நடையில் உருவானது. ஆரம்ப முதல் கடைசி வரையில் நம்மை இழுத்துச்செல்லும் லளிதமான நடையிலே நண்பர் உமைதாணு எழுதி இருக்கிறார்.

இதற்கு அணிந்துரை கூறுவது அனாவசியம். பூக்கடைக்கு விளம்பரமா, வேண்டும்?

சென்னை,
27—2—'44.

கோ. த. ச.

## சமர்ப்பணம்

இந்த சிறிய நூலை என் அருமை அப்பா திரு. உ. சிதம்பரனுர் அவர்களுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறேன்.

தியாகராயநகர்
சென்னை

சி. உமைதாணு
12—2—'44

# முகவுரை

அன்பர்களுக்கு,

'பித்தர் சொன்னவும், பேதையர் சொன்னவும், பத்தர் சொன்னவும், பன்னப் பெறுபவோ' என்றாற் போன்று செந்தமிழ்த் திருநாட்டன்பர்களுக்கு எமது கழகத்தின் தலை வெளியீடாம் "நாஞ்சியில் நான்" எனப் பெயரிய இச்சிறு நூலை அர்ப்பணம் செய்கின்றோம்.

இதன் ஆசிரியர் திரு. சி. உமைதாணு அவர்கள். முடிகெழு வேந்தர் மூவர் போற்றியாண்ட பீடுடைத் தமிழகத்தை மீண்டும் உருவாக்கி ஒருகோலோச்சுவான் வேண்டி, சென்னையில் நிறுவப்பட்ட 'தந்தி' பத்திரிகையின் துணை ஆசிரியராக இருந்து தொண்டாற்றி வருகிறார்கள்.

நாஞ்சில் நாட்டின் இயற்கைத் தோற்றத்தையும், நில, நீர் வளங்களையும், ஆண்டு குழுமியுள்ள மக்களின் வாழ்க்கையிலுள்ள சில அம்சங்களையும், இந்நூலில் குறிப்பிட்டிருப்பதோடு, நாஞ்சி பிரமுகர்கள் அநேகரின் வாழ்க்கைக் குறிப்புகளையும் ஆசிரியர் செவ்வனே விளக்கிச் செல்கிறார்.

ஆசிரியர் தமிழில் நிறையப் புலமை பெற்றிருப்பினும், பல தமிழ்ப் பண்டிதர்கள் போலல்லாது யாவர்க்கும் விளங்கும் எளிய நடையிலேயே தம் நூலை

ஆக்கி இருக்கிறார் என்பது வெள்ளிடைமலை. பள்ளிச் சிறார்கள் அறியவேண்டிய பல நுட்பங்கள் நூல் முழுவதும் நிறம்பியுள்ளன.

இவ்வரிய நூலை, காகித விலை விடம்போல் ஏறியுள்ள இந்த யுத்த காலத்தில் வெகு குறைந்த ஒன்பது அணா விலைக்கு வெளியிட்டிருக்கிறோம். எமது கழகத்தின் துவக்க வெளியீடாகையால் இக்குறைந்த விலையைக் குறித்துள்ளோம்.

இந்நூல் அச்சு வாகனத்தமர்ந்த காலை, எமக்கு வேண்டுவன உற்றுழி உதவியும் மற்றும் முக்கிய பிற கைங்கரியங்களும் செய்யாநின்ற அன்பர் பலர்க்கும் எமது நன்றி உரித்தாகுக!

மற்றும் சிரமம் கருதாது, நூலை வெகு அழகாக அச்சிட்டு உதவிய சென்னை கபீர் அச்சுக்கூட உரிமையாளர் அவர்களுக்கும் நாங்கள் என்றும் கடமைப் பட்டுள்ளோம்.

"குற்றம் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த, மாந்தர் கடன்."

திருவல்லிக்கேணி,
சென்னை.
3—2—'44.

ல. மு. விசுவநாதம்
காரியதரிசி,
கலைபயில் கழகம்.



நாஞ்சி நாட்டில் நாங்கள் தங்கிய இடம்.



சுசீந்தரம் ஆங்கில பாடசாலை
(திரு. பிள்ளை அவர்களால் நிறுவப்பட்டது)



செல்வர் சுப்பிரமணியர்.



தாழக்குடி திரு. சின்னத்தம்பியா பிள்ளை.

# நாஞ்சியில் நான்

காமராசர் பல்கலை தமிழியல் துறை ஆ. சண்முகம் நூலகம்.

## டில்லி தர்பார்

மாலே சுமார் 5 மணி இருக்கும். புது டில்லி அரசாங்க காரியாலயத்தின் முன்பாக நானும் ஒரு பத்திரிகை ஆசிரியரும் சாலே வழியாக உலாவிக் கொண்டிருக்கிருேம். பகல் முழுவதும் அரசியல் விஷயங்களே அலாசி அலுத்து அமைதியாக ஓய்வெடுக்கிறது எங்கள் மனம். ஆனுல் அன்பர் கலேத்துவிட்டார். நித்தியம் நம் வாழ்க்கையில் நடக்கும் சிரிப்பூட்டும் நிகழ்ச்சிகளே அவிழ்த்துக் கொண்டிருந்தார். கதைகள் விடுவதில் நண்பருக்கு நிகர் அவர்தான். நான் அவைகளே நம்பாவிடினும் பொழுது போக்கிற்காகக் கேட்டு ஆனந்தித்துக் கொண்டிருப்பதுண்டு. அவரது பெயரை, இச் சந்தர்ப்பத்தில், தெரிவிக்காது போவதுபற்றி அவர் எனக்கு என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்.

## மோட்டார் விபத்து

நாங்கள் நடந்துகொண்டே போகிருேம். அப்பொழுது அரசாங்க காரியாலய மைதானத்தின் வழியாக, 1942 "மாடல்" காரொன்று வருகிறது. ஆயிரக்கணக்கில் போகும் காரில் அதுவும் ஒன்று என்றிருந்தோம். ஆனுல் அது எங்களே சும்மாவிடவில்லே. கார் ஓட்டினவர் சிறிது பயிற்சி குறைவாக இருக்க

லாம். அல்லது அவரது கவனத்தை வேறெங்காவது செலுத்தி யிருக்கவேண்டும். இல்லையானால் ஏன் என் மேல் இடித்திருக்கவேண்டும்? என் மேல் இடித்தது பற்றி வருத்தமில்லை. வருந்தப்போவது மில்லை. ஆனால் வேடிக்கை என்னவென்றால் அந்த காரோட்டி, என்னிடம் குற்றம் கண்டுபிடித்து விட்டான்! "சைக்களில் செல்லும் ஒருவனுக்கு, இதுமாதிரி விபத்துகள் நிகழ்ந்தால் அவன் முந்தியாக வேண்டும்" என்பது சைக்கள் உலகம் கண்டறிந்த உண்மை. அதை காரோட்டியும் கடைப்பிடித்துவிட்டான் போலும்!

காரின் உள்ளே, நாகரிக உடையணிந்த, ஓர் ஒல்லியான மனிதர் இருக்கிறார். அவரைக் கண்டதும் நடந்தவை யாவையும் மறந்தேன். நம் பத்திரிகை ஆசிரியருக்கு அவரை நன்றாகத் தெரியும்போலும். அவரை எனக்கு அறிமுகப்படுத்தினார். "இவர்தான் டாக்டர் நடராஜன். இவரது சொந்த ஊர், 'நகார் கோயில்' என்னும் நகராகும் என்றார். நகார் கோயில் (நாகர் கோவில்) திராவன்கூரிலிருக்கிறது என்றார்." அதற்கு முன்பு இரண்டொரு சந்தர்ப்பங்களில் அந்நகரைப் பற்றி கேட்டிருக்கிறேன்.

## சினிமா விருந்து

பம்பாய் "தாஜ் மஹால்" ஹோட்டலில் தங்கியிருந்தபோது, எனக்கு கிடைத்த ஓர் தமிழ் நண்பரோடு மாதுங்கா சென்றிருந்தேன். தென் இந்தியர்களுக்கு புகலிடம் கொடுத்துக்கொண்டிருக்கும் இடம் அது. திரும்பி வரும்போது, ஓர் சினிமா தியேட்டருக்குள் நுழைந்தோம். தமிழ்படமாடுகிறது. உலகப்

புகழ் சார்லிசாப்பிலினின், விசேஷ ஹாஸ்ய நடிப்பு திறனை கையாளும் ஒருவரது நடிப்பு எங்களை பல தடவை குலுங்க வைத்தது. நண்பரிடம் அவரை குறித்த விவரங்களை கேட்டேன். அவர் திரு. என். எஸ். கிருஷ்ணனென்றும், நாகர் கோவிலைச் சேர்ந்தவர் என்றும் அறிவித்தார். மேலும் நாகர் கோவில் திருவி தாங்கூரிலுள்ள, நாஞ்சி நாட்டிலிருக்கிறதென்றும் அறிவித்தார்.

**மலரும் மாலையும்**

சென்னையிலிருந்து எனக்கு "மலரும் மாலையும்" எனும் புத்தகத்தை ஓர் மகானுபாவன் அனுப்பியிருந் தார். ஒய்வு நேரங்களில் படித்துப் படித்து பரவச மடைவேன். என் வேலை நேரங்களில் ஒரு பாகத்தைக் கூட மலரும் மாலையும் கவர்ந்துவிட்டது. படிக்கும் போதெல்லாம், "அதன் ஆசிரியரை ஒரு தடவை சென்று பார்த்துவிட்டு வந்தாலென்ன?" என்ற ஓர் பிரச்னை எழுந்தது. அதை ஒட்டி தென்னுட்டையும் சுத்தி அடித்துவிட்டு வந்துவிடலாமல்லவா? தென் ளுட்டு சுற்றுப் பிரயாணத்திற்கு வேண்டிய திட்டங் களை தயாராக்க தொடங்கிவிட்டேன். என் அந்தரங்க நண்பர் திரு. ல. மு. வி. நாத், அமலுக்கு கொண்டுவர ஏற்பாடுகள் செய்தார்.

**ரெயில் வேகம்**

1942, அக்டோபர் 2-ம் தேதி, டில்லி ஸ்டேஷனுக்கு வந்திருப்பீர்களானுல், நானும் ல. மு. வி. நாத் அவர்க ளும் கிரான்டிரங்க் எக்ஸ்பிரஸில் உட்கார்ந்திருப்பதை கவனித்திருப்பீர்கள். பேரிரச்சலுடனும், நண்பர்களின்

ஆசீர்வாதத்திற்கிடையிலும் வண்டி நகர்ந்தது. வண்டி வந்த வேகம், மனோவேகத்திற்கு பின்னடிதான் வந்தது. எனினும் ஸ்டேஷன்களெல்லாம் ரெயில் வண்டியைக் கண்டு பதறி ஓடின என்று கவிகள் வர்ணிப்பார்கள். இரு தினங்களில் சென்னை, எவரஸ்ட் ஹோட்டலில் வந்து சேர்ந்தோம். காலையில் அரிசியும், உளுந்தும் கலந்து பண்ணின இட்டலியை சாம்பாருடன் அருந்த அருந்த அருமையாகத்தானிருந்தது. சப்பாத்தியும், பூரியும் தின்று சலித்த எனக்கு ஆனந்தமாக யிருந்தது.

நாங்கள் வந்த தினமுதல் மழை பலமாக பெய்ய ஆரம்பித்துவிட்டது. சென்னையில் மேகமூடி சூரியனை மறைத்திருந்தது. ஒரு வாரம் கழிந்தபின்னர், திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் ஏறி மறுநாள் திருவனந்தபுரம் வந்தடைந்தோம். திருவனந்தபுரம் மலையாள மந்திரத்தில் மயங்கிக் கிடக்கிறது. அவர்களது பாஷை எங்களுக்குப் புரியவில்லை. கைசாடையால் விஷயமறிந்து கொண்டோம். மலையாளம் தெரிந்த ஒருவரை எங்கள் தற்காலிக மொழிபெயர்ப்பாளராக நியமித்திருந்தோம்.

### நாஞ்சி நாடு அடைந்தோம்

என் நாட்குறிப்பு டயரியை நீங்கள் புரட்டி, 1942 அக்டோபர் 20-ம் தேதியைப் பார்த்தால் கீழ்கண்டவைகளை வாசிப்பீர்கள்.

“மரங்களடர்ந்த சோலைகளை ஓரமாக உடைய சிமிண்டு சாலை திருவனந்தபுரத்தையும், நாகர் கோவிலையும் இணைக்கிறது. நாஞ்சி நாட்டின், முக்கிய நகரம் நாகர் கோவில். இன்று ஓய்வெடுத்து நாளை முதல், நாஞ்சி நாட்டை சுற்றிப் பார்க்கவேண்டும். திருவ

னந்தபுரத்தில் என்னை ஆச்சரியமாக பார்த்தவர்களைப் போல் இங்கு ஒருவரும் பார்க்கவில்லை. பொதுவாக இன்று வந்து நம்மை சந்தித்து பேசியவர்களில் யாவரும் நற்குணசாலிகளாகவே இருக்கின்றனர்.”

மறுநாட்காலை, ஓர் வாடகை மோட்டாரை ஏற்பாடு செய்தார் திரு. நாத் அவர்கள்.

**குமரி சென்றோம்**

முதலாவது கன்னியாகுமரிக்குச் சென்றோம். என்ன ஆச்சரியம்! மூன்று பக்கமும் கடல். வங்காளக் குடாகடல், இந்து மகாசமுத்திரம் அரபிக்கடல் மூன்றும் கூடுகின்றன. குன்று வீரத்துடன் நின்று தவம் புரியும் குமரி அம்மனை, வணங்கி பின்பு மாலையில் உலாவச் சென்றோம். எங்களது அனுமதி இல்லாமலே ஒருவர் எங்களுக்கு வழிகாட்டியாக வந்தார். அவர், அவரது பிரதாபங்களைத்தான் எங்களிடம் அவிழ்த்தாரே ஒழிய, நாங்கள் ஆவலுடன் அறிய வேண்டிய விஷயங்களைத் தெளிவுபடுத்த முடியவில்லை. கன்னியாகுமரியின் ஜனத்தொகை என்ன என்று கேட்டதற்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாதென்று கூறிவிட்டார். அவர் பெரியவர்களுடன் பழகுவதால், இதுபோன்ற சிறு விஷயங்களில் அக்கறை கொள்ளுவதில்லையாம். என்ன பிற்போக்கான அபிப்பிராயங்களை மனதில் பதிய வைத்திருக்கிறார் என பரிதாபப் பட்டோம்.

**கவி மணி பேட்டி**

இரவு 8 மணிக்கு நாகர் கோவில் வந்து சேர்ந்தோம். அடுத்தபடியாக கவி மணி தேசிக விநாயகம் பிள்ளையை நேரில் பார்க்கவேண்டுமென்ற திட்டப்படி, மறுநாள், புத்தேரி எனும் சிற்றூருக்குச் சென்றோம். நான் அதற்கு முன்கண்டதில்லை. அவரது வீட்டைக் கேட்டுக்கேட்டு, கண்டுபிடித்துவிட்டோம். நாங்கள் சென்றது நல்ல சமயம். அவர் நேரம் போகவழி தெரியாது விழித்துக்கொண்டிருப்பது போன்று தெரிவித்தது அவரது கண்கள். நாங்கள் எங்களை அறிமுகப் படுத்திக்கொண்டோம். சுமார் ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தோம்.

அவரது பிறந்த ஊர் அந்த புத்தேரி இல்லையாம். அதை அடுத்த தேரூர் எனும் ஊராம். இவ்வளவு தூரம் வந்துவிட்டு அவ் ஊரையும் பார்க்காமல் போவது அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை. நாகர் கோவிலுக்கு வந்து மத்தியான சாப்பாடு சாப்பிட்டோம். சாம்பாறு, ரசம், பருப்பு, மோர் இவ்வளவு தான் குழம்பு வகைகள். இவைகள் போதாதா என்று கேட்கிறீர்களா? அதற்கல்ல நான் குறிப்பிட்டது. வடவேங்கடம் தென் குமரிவரை, எல்லா ஹோட்டல்களிலும் இதே குழம்புகள்தான். ஆகா! இவ்விஷயத்தில் ஹோட்டல்காரர்களின் ஒற்றுமையை பாராட்டாமலிருக்க முடியுமா!

உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டல்லவா? நாங்களும் சிறிது ஓய்வெடுத்தோம். பின் எழுந்து தேனீர் அருந்திவிட்டு சிறிது உலாவினோம். நாகர் கோவிலில் முக்கிய இடம் 'மணிமேடை' ஜங்ஷன்.

அச் சந்தியில் திருநெல்வேலி, பாபநாசம், அம்பாசமுத்திரம், திருவனந்தபுரம், கன்னியாகுமரி மற்றும் பல இடங்களிலிருந்து ஆள்களைக் கொண்டுவந்து மோட்டார் கார்கள் குவிக்கின்றன. 'தேவி' பத்திரிகாலயத்திற்குச் சென்றோம். தேவி ஆசிரியர் திரு. முதலியார் அவர்கள் எங்களுக்குச் செய்த உபகாரங்களும், உபசாரங்களும் மறக்க முடியாதவைகள். நாங்கள் நாகர் கோவிலுக்கு வந்ததும் அவரை முதலில் சந்திக்காதது நாங்கள் தவறிய கடமைகளில் ஒன்று என்று உணர்ந்தோம். அன்று முதல் அவர் எங்கள் வேண்டுகோளின்படி, பார்க்காது விட்டுப் போன இடங்களை காட்டித்தந்தார்.

## தேரூர் திருநகர்

மறுநாள் காலையில் தேரூருக்குச் சென்றோம். பெயர்போன சிவ ஆலயத்தையுடைய சுசீந்தரத்தை அடுத்து அவ்வூர் இருக்கிறது. முதலில் நாலு பக்கமும் பச்சை பசேரென செழிப்பு வாய்ந்த நிலங்கள். கடலில் கப்பல் நிற்பதுபோல் பச்சைப் பயிர் நிலங்களுக்கு மத்தியில் தேரூர் இருக்கிறது. ஊரின் வடபக்கம் பெரியதொரு ஏரி. வரண்ட ஏரியல்ல. தண்ணீர் நிரம்பி நின்று கொந்தளித்துக்கொண்டிருந்தது. சிறு குழந்தைகள் அக்குளத்தில் குதித்து நீந்திச் சென்றது ஆச்சரியமாக யிருந்தது. அக்குழந்தைகளை பொறுக்கி எடுத்து கப்பல் தொழிலுக்கு அமர்த்தினால், மாலுமிகளாக வந்து திகழ்வர். எங்களைக் கண்டதும் குழந்தைகள், தங்களுக்குத் தெரிந்த வித்தைகளைக் காட்டத் தொடங்கிவிட்டன. மீன்களைவிட அவர்கள் தண்

ணீரில் எவ்வளவு சுதந்திரமாக இருக்கிருர்கள் தெரியுமா? அக்காட்சியை கண்குளிர நோக்கிவிட்டு அவ்வூர் புத்தகாலயத்திற்குள் நுழைந்தோம். அந்நூல் நிலையத்தின் பெயர் 'செந்தமிழ்க்கழகம் புத்தகாலயம்'. தேரூரில் பிறந்து வளர்ந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களால் அப்புத்தகாலயம் ஆரம்பிக்கப் பட்டது. அங்குள்ள பத்திரிகைகளை யாவும் பார்த்தோம். அங்கிருந்த பலரோடு வெகு நேரம் உரையாடினோம்.

### செல்வர் சுப்பிரமணியர்

அவ்வூர் பிரமுகர்களில் ஒருவரான திரு. சுப்பிரமணிய பிள்ளையை பார்க்கச் சென்றோம். அவர் திருவிதாங்கூர் அரசாங்க சட்டசபையில், நாஞ்சி நாட்டு பிரதிநிதியாகச் சென்று சாதித்த காரியங்கள் பலவாம். அந்நாட்டில் தமிழை நல்ல நிலைக்கு கொண்டுவர பாடு பட்டவர்களில் அவரும் ஒருவராம்.

'நாஞ்சி நாட்டார் இன்றும் விவசாயிகளே' என்று பெருமை கொள்வதற்கு திரு. சுப்பிரமணிய பிள்ளைதான் காரணம் என்று பலர் கூறுகிருர்கள். பாழாறுகளை கோளாறு பார்க்க கவர்ன்மெண்டாரிடம் வாதாடினராம். அதில் வெற்றிபெற்று நன்மக்களின் மேன்மதிப்பைப் பெற்ருர். மேலும் நாஞ்சி நாட்டு சமூக சீர்திருத்தங்கள் பல புரிந்திருக்கிருர்.

"தந்தையின் சொத்திற்கு அவர் மக்கள் அவகாசிகள் அல்ல!" என்ருெரு அக்கிரம சட்டம் அந்நாட்டில் இருந்தது. இச்சட்டப்படி அந்நாட்டு வேளாளர் ஒருவர் இறந்தாராஞல், அவருக்குப் பிறந்த குழந்

தைகள் உடன் வெளியேறிவிடவேண்டும். இறந்த வரின் மருமக்கள் வீட்டில் புகுந்து அதிகாரம் செலுத் தத் தொடங்கி விடுவர். தெருவில் நிற்கப்போவது ஆறு மாத குழந்தையானாலும் சரி, ஆறு வருஷக் குழந் தையானாலும் சரி. அதுபற்றி அக்கரையில்லை.

இயற்கைக்கு விரோதமான இந்த சட்டத்தின் கொடூரத்தை கவிமணியின் 'நாஞ்சி நாட்டு மருமக்கள் வழி மான்மியத்'தை படித்தால் தெரியும்.

இச்சட்டத்தை, வேரறுக்கப் பாடுபட்டு, பெண்க ளுக்கும் தங்கள் உரிமையை வாங்கிக் கொடுத்து சமூகத் தைக் காப்பாற்றிய மகான் திரு. பிள்ளை. ஆகவே அவரை 'நாஞ்சி நாட்டு ராஜாராம் மோகன்ராய்' என்று பலர் கூறுவதைக் கேட்டு ஆச்சரியப்படுவதற் கில்லை.

நாஞ்சி நாட்டில் ஒரு பெரிய ஆங்கில பாடசாலை அவரின் முயற்சியால் தோன்றி இருக்கிறது. அவரே அப்பள்ளியின் நிர்வாகஸ்தரும், காப்பாளரும் ஆவர். அறியாமை இருளைப் போக்கி ஆண்டுதோறும் அநேக படித்த இளைஞர்களை வெளியே அனுப்புகிறது அப் பள்ளி.

அவர் உருவத்தில் சிறிது பருமனானாலும் போதிய உயரமில்லை. தன் புன்சிரிப்பாலும், சாந்தப் பார்வை யாலும் பார்ப்பவர்களை பரவசப்படுத்துகிறார். காந்தி அடிகளின் திருவாக்கை ஆனமட்டும் அடிபிசகாமல் நடத்தி வருகிறார். வீட்டில் ராட்டினம் சுழன்று கொண்டிருக்கிறது. மருந்திற்கு அவசியப்பட்டாலும் மல் துண்டுகள் அடுத்த வீட்டில் இருந்தே கொண்டு வரவேண்டும். வீட்டில் எங்கு பார்த்தாலும் பத்திரி

கைகளும், பெரிய பெரிய நற்புத்தகங்களும் குவிந்து கிடக்கின்றன. கலைமகள் குடிகொண்டிருக்கிருள் என்பது வெளிப்படையாயிற்று.

அதிகம் படித்தவர். மக்களையும், சுற்றத்தாரையும் படிப்பிக்க வைப்பவர். வள்ளுவர் குறிப்பிட்டிருக்கும் மனைவியருக்கு வேண்டிய குணங்களை ஒருங்கே பெற்ற வர் திரு. பிள்ளையின் வாழ்க்கைத் துணைவி. அவர் களுக்கு 5 மக்கள் இருக்கின்றனர். மூத்தவர் முத்துக் கறுப்பர். மருத்துவ தொழில் பார்த்து வருகிருர். தினமும் பல உயிர்களை எமன் கையில் இருந்து தன் தொழில் திறமையால் பறித்துக் காப்பாற்றுகிருர். பல குழந்தைகள் அவரது பெயராலே அழைக்கப்படுகின் றன. தாய் தந்தையர்தான் அவருக்கு கண்கண்ட தெய்வம். முத்துக் கறுப்பரின் அடுத்த சிறியோன் சிவன் பிள்ளை. தேச பக்தி முத்திபெற்றவர். அவரை உலகம் 'பொன் பிள்ளை' என்றே அழைக்கிறதாம். அவரை எங்களுக்கு நேரில் பார்க்க முடியவில்லை. அப் பொழுது அவர் சிறையில் இருந்தார்.

பணம் சேமித்து இன்புறத் தெரியாதவர்களிடம் செல்வம் இருப்பதைவிட பொருட் செல்வி இவர்க ளிடம் செல்வார்களாக!

திரு. பிள்ளையின் எதிர் வீட்டிற்கு திரு. தே. சி. ராமசாமி அவர்களைக் காணச் சென்ருேம். துர் அதிர்ஷ்ட வசமாக அவர் வீட்டில் இல்லை. லட்மண புரிக்கு படிக்கச் சென்றிருந்தார். அவர் எல்லாம் வருங் கால நாஞ்சி நாட்டு முற்போக்கிற்கு பொறுப்பு வாய்ந்த வர். அவரை எப்படியாவது சந்தித்துவிடவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிருேம்.

## இளைஞர் இயக்கம்

தேரூரில் ஓர் இளைஞர் இயக்கம் இருக்கிறது. அச்சங்கத்தில் அப்பொழுது காரியதரிசியாக இருந்த திரு. பெருமாளைச் சந்தித்தோம். அன்று அவர் எங்களுக்கு மிகவும் நேர்த்தியான ஓர் விருந்தளித்தார். மாலையில் ஒரு பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டார். அன்று மாலை 'ஆசிரமம்' என்ற ஊருக்குச் செல்வதாக போட்டு வைத்திருந்த ஏற்பாட்டை ரத்து செய்ய வேண்டியதாயிற்று. வேண்டியமட்டும் எடுத்துக் கூறியும் திரு. பெருமாள் கேட்பதாக இல்லை. ஆகவே மாலையில் நடந்த கூட்டத்தில் நானும், அன்பர் ல. மு. வி. நாத்தும், தேவி ஆசிரியரும் பேசினோம். கூட்டம் பரஸ்பர நன்றி அறிவிப்புடன் இனிது கலைந்தது.

இரவு நாகர்கோவில் வந்தோம். மறுநாள் டாக்டர் நடராஜன் பிறந்த 'ஆசிரமம்' என்னும் ஊரிற்குச் சென்றோம்.

## நாஞ்சி நடராஜன்

ஆசிரமம் ஒரு சிறு குக்கிராமம். ஆனால் அவ்வூர் வழியாக ஒரு முக்கியமான ரோடு செல்கிறது. சிறு பையன்கள் இடுப்பில் சிறு துண்டுகளுடனும், தலையில் பெரிய தலைப்பாகைகளுடனும், கையில் கம்புகளுடனும் மரத்தடி நிழலில், தெம்மாங்குப் பாட்டுகள் பாடிக்கொண்டிருந்தனர். அவர்கள் மாடுகள் மேய்க்கும் சிறுவர்கள். பாவம்! அவர்களுக்கு அந்த வயதிலேயே வயிற்றுப் பிரச்னை வந்துவிட்டது.

அவ்வூரில் நம்மை ஒரு கோயில் வரவேற்கிறது. அடுத்தாற்போல் ஒரு குளம். அக்கோயில் திண்ணையில்,

விவசாயிகள் தங்கள் மண்வெட்டிகளை தலைக்கு அணையாக வைத்து தூங்கிக்கொண்டிருக்கின்றனர். வயிற்றைப் பார்த்தால், வெறும் வயிராகத் தெரிகிறது. வெயிலானது அத்திண்ணைமேல் வந்து அவர்கள் மீது பட்டதும் அவர்கள் அந்த வெப்பத்தால் எழுந்து, 'மணி 12 ஆகிவிட்டது' என்று பக்கத்து குளத்தில் குளிக்க ஆரம்பித்துவிடுவார்கள். பின் வீட்டிற்குச் சாப்பிடப் போவார்கள். நாட்டுப்புர வாழ்க்கையில் தான் என்ன ஆனந்தம்!

திரு. நடராஜன் வீட்டிற்குச் சென்றோம். அவர்களது அம்மையார் எங்களை உபசரித்தார்கள். அம்மையாரை முன்னமே புகைப்படத்தில் பார்த்திருக்கிறேன். மைந்தன் இருக்கும் ஊரிலிருந்து வந்திருப்பதாக அறிந்ததும் அவர்கள் அடைந்த குதூகலம் சிறிதளவல்ல. சமாசாரங்கள் யாவும் அறிந்தபின் உணவு அருந்தினோம். டாக்டர் நடராஜனது சகோதரரிடம், வெகு நேரம் பேசினோம். டாக்டரின் வாழ்க்கைப்புயலின் பல பாகத்தை விவரித்தார். அவரது வாழ்க்கை, யாவருக்கும் நிகழ்வதுபோல் இன்பமும் துன்பமும் நிறைந்தவைகளாகவே இருக்கின்றன.

திரு. சுப்பிரமணிய பிள்ளையின் பள்ளிக்கூடத்தைக் குறித்து முன்பு குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அப்பள்ளிதான் திரு. நடராஜனுக்கு ஆரம்பக் கல்வி அளித்தது. அப்பள்ளிக்கூட ஆசிரியர் ஒருவரை சந்தித்தபோது அவர் என்னிடம் குறிப்பிட்டது இது தான். "நடராஜனைப்போல், எல்லா மாணவர்களும் இருப்பார்களானால், ஒரு வகுப்புப் பாடத்தை முடிக்க ஒரு வருஷ கால அளவு அவசியமே இல்லை."

## பட்டம் பதவி

பின்னர் நடராஜன் தன் கல்லூரிப் படிப்பை நடராஜ பெருமான் எழுந்தருளியிருக்கும் தில்லையம்பதி (சிதம்பரத்தில்) முடித்தார். தகுந்த கௌரவத்துடன் சென்னை பல்கலைக்கழகத்தில் எம். ஏ. பட்டம்பெற்ருர். திருநெல்வேலி இந்து கல்லூரியில் பொருளாதார போதகராக சிலகாலம் வேலை பார்த்தார். பின்னர் சென்னை பல்கலைக் கழகத்திலேயே பொருளாதார ஆராய்ச்சித் துறையில் சிறிதுகாலம் ஊழியம் செய்தார். இந்தச் சமயத்தில்தான் அவர் 'வரி வசூல்' (Land Revenue) என்னும் விஷயத்தை எடுத்து ஆராய்ச்சி செய்து சென்னை மாகாண ஒவ்வொரு ஜில்லாக்களிலும் உள்ள புள்ளிக் கணக்குகளுடன், அரசாங்கத்தாரிடம் சமர்ப்பித்தார்.

## டாக்டர் ஆனர்

பல்கலைக்கழக அதிகாரிகள் அவருக்கு டாக்டர் என்ற பட்டத்தை அளித்திருக்கிருர்கள். இப்பட்டத்தை அவர் அடைவதற்கு உழைத்த உழைப்பை, அவரிடம், குமாஸ்தாவாக இருந்தவரிடம் கேட்டால் தெரியும். இரவு பகல் வேறுபாடின்றி உழைத்தார். ஆகவே அவர் இப்பொழுது டாக்டர் நடராஜன் எம். ஏ. டி. லிட் (Dr. Natarajan M. A. D. Litt) என வழங்கப்படுகிருர்.

## முயற்சி யுடையார் இகழ்ச்சி அடையார்

'இந்திய நாட்டு கைத் தொழில் வளர்ச்சி' என்றும் ஓர் புத்தகம் எழுதியிருக்கிருர். பொருளாதாரம்

என்றுலே ஒரு கடின விஷயம். அப்புத்தகத்தில் அவர் அவ்விஷயத்தை மிகவும் எளிய நடையில் 'ரிக்ஷா வாலா'விற்கும் விளங்கும்படி எழுதியிருப்பது குறிப் பிடத்தக்கது. அப்புத்தகத்திற்கு பல்கலைக் கழகத் தார் ரூபாய் 750 பரிசாக வழங்கியுள்ளார்கள். மேலும் இன்டர்மீடியட் வகுப்பிற்கும் பாட புத்தகமாக வைத்திருக்கின்றுர்கள்.

* "வேளாண்மைக் கடன்", 'லெனினும் ரஷ்ய புரட்சியும்' என்ற பல புத்தகங்களும் எழுதியுள் ளார்கள். இடையிடையே சிறப்புயர்ந்த கட்டுரை களையும் எழுதி பல பத்திரிகைகளுக்கு கொடுத்து உதவியிருக்கிறுர்.

இப்பொழுது அவர் மத்திய அரசாங்கத்தில் பொருளாதார ஆராய்ச்சியாளராக (Economics Investigator) இருக்கிறுர். நாஞ்சிநுட்டிலேயே முதல் முதல் டாக்டர் பட்டம் கிடைத்த கௌரவம் அவரைச் சாரும். மேலும் இதுமாதிரி ஒரு உயர்ந்த பதவியை, நாஞ்சிநாட்டிலிருந்து எவருக்கும் கிடைத்ததில்லை என்பதை நாஞ்சி நாட்டு வாசிகளே தெரிவித்தனர்.

## நகைச்சுவை அரசன்

என்ன ஆச்சரியம்! அதோ தெரியும் மாளிகை எவ்வளவு அழகாக இருக்கிறது. பொன்னிறமாக இருக்கிறதே! நாகர் கோவிலிலும் இவ்வளவு நல்ல கட்டிடம் இருக்கிறதா. இம் மாளிகை எந்த அரச

* 'வேளாண்மைக் கடன்' என்ற புத்தகத்தை பி. ஏ. வகுப் பிற்கு பாடபுத்தகமாக வைத்திருந்தார்கள்.

னுடையது? என்று கேட்டேன் எங்களுடன் வந்த ஒரு நாகர் கோவில் நண்பரிடம். அதுதான் நகைச் சுவை அரசன் என். எஸ். கிருஷ்ணனின் மாளிகை என்றார். பின் கார் நேரே அவர் மாளிகையை நோக்கிச் சென்றது. வாசல்படி சேர்ந்ததும், நாங்கள் இன்னா ரென்று குறிப்பிட்டிருக்கும் சீட்டைக் (Visiting Card) கொடுத்தனுப்பினோம்.

உள்ளே சென்று எங்களுக்கென்று போட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்து அரசரோடு பேசிக்கொண்டிருந் தோம். பம்பாயில் நான் கண்ட படம் என் மனக்கண் முன் காட்சியளித்தது. என்னை அறியாமலே உரக்கச் சிரித்துவிட்டேன். என்ன? என்ன? என்று கேட் டனர். பதில் சொல்லத் தெரியாது பயித்தியக்கார விழி விழித்துக்கொண்டிருந்தேன்.

வெளியில் பலர் அரசருக்காகக் காத்துக்கொண் டிருந்தனர். அவர்கள் யாவரும் ஒவ்வொரு பொது ஸ்தாபனத்திற்கு நன்கொடைபெற வந்திருப்பவர்கள். 'ஒருவர் எங்கள் புத்தகாலயத்திற்கு ஏதாவது கொடுங் கள்' உடனே ரூ. 100 செக் கொடுத்தாய்விட்டது. "நாங்கள் ஒரு நெசவு ஆலை தொடங்க எண்ணியுள் ளோம். அதற்கு தங்கள் ஆ...த...ர...வு" சரி அதற்கு வேண்டிய தளவாடங்கள் யாவும் என் கணக்கு! இங்ஙனம் வருபவர்களுக்கெல்லாம் சளைக் காது கொடுத்துக்கொண்டிருக்கிறார். கொடையிற் சிறந்தவர். அவருக்கு சினிமாவில் கிடைக்கும் ஊதி யத்தில் யாவும் பங்கு கொள்கின்றார்கள். ஆகவே அவர் நகை சுவை அரசர் மட்டுமல்ல. கொடையில் கர்ண அரசராகவே விளங்குகிறார்.

அவர்து குடும்பம் மிகவும் பெரியது. ஏராளமான சுற்றத்தார்கள் இருக்கின்றனர். நாஞ்சி நாட்டில் உள்ள சிற்றூர்களில் யாவும் அவரது சுற்றத்தார்கள் இருக்கின்றனராம். பணம்பவுசும் வந்துவிட்டதனுல் எல்லாரும், ரெத்த ஒட்டு உண்டு என்று குழுமி விடுவர்.

கிருஷ்ணன் தன் இளம் வயதில் மிகவும் கஷ்டப் பட்டிருக்கிருர். தன் உழைப்பால் முன்னுக்கு வந்தவர். முதலில் நாடகக் கம்பெனியில் நடித்துவந்தார்.

**மலைப்பிரதேசத்திலே**

நாஞ்சி நாட்டிற்கு வடக்கு எல்லை செழிப்பு வாய்ந்த மலைகள். நாஞ்சி நாட்டிற்கு வந்த பிரயாணி ஒருவன் அம்மலைகளைப் பார்க்கவில்லையென்ருல் அவனை பிரயாணி என்று கூறிவிடவே முடியாது.

நானும் நண்பர்களுமாக மலைகளைப் பார்க்கச் சென்ருேம். வழியில் பூதப்பாண்டி, அழகிய பாண்டிய புரம் என்ற பல பெரிய கிராமங்களைக் கடக்கவேண் டியதாயிருந்தது. முதலில் 'தடிக்காரன் கோணம்' என்ற மலையை அடைந்தோம். அங்கு ஒரு பெரிய கால்வாய் ஒரு பனை அளவு கீழே குதித்து மறுபடியும் அவ்வுயரத்தில் ஏறிச் செல்கிறது. இத் திட்டம் நவீன விஞ்ஞான ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்ட டிருக்கிறது. இந்த திட்டத்திற்கு ஆங்கிலத்தில் சைபன் (Syphon) என்று பெயர் கொடுத்திருக் கிருர்கள்.

மேற் குறித்த மலை செழிப்படர்ந்த காடுகளாகும். உயர்ந்த மரங்களும், சிவந்த பூக்களையுடைய படர்ந்த

கொடிகளும், செழித்து வளர்ந்திருந்தன. மேலும் கனிவர்க்கங்களைத் தரும் மரங்களும் மலிந்திருந்தன. ஆகவே நாங்கள் கொண்டுபோன ஆகாரம் திரும்பி வந்ததுபற்றி ஒருவரும் ஆச்சரியப்படவில்லை.

அங்கிருந்து ஒரு ஆறு மைல் கடந்து ஒரு பெரிய தோட்டத்தை அடைந்தோம். அத்தோட்டம், நாகர்கோவில் திரு. குமாரசாமி என்பவருக்கு சொந்தமாம். அவரைக் குறித்து பிறிதோரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். அத் தோட்டத்தில் நின்ற வாழையின் ஒவ்வோர் இலையிலும் சுமார் இரண்டுபேர் சுகமாக புரண்டு தூங்கலாம். மழைக்காலங்களில் அங்கு வேலை செய்பவர்களுக்கு குடையாகப் பயன்படுவது அவ்விலைகள்தானும்.

பின் மாசுவத்தி என்ற இடம் அடைந்தோம். அங்கு மூன்று ஆறுகள் வந்து கூடுகின்றன. அங்குள்ள கற்கள் உருண்டு திரண்டு பழபழப்பாக இருக்கின்றன. அவைகள் பெரிய சிற்பிகளால்கூட செய்ய முடியாத வேலைப்பாடுகளைக் கொண்டவை. இங்கு குரங்குகள் அதிகமாக இருக்கின்றன. வாலைத் தவிர நமது அங்கங்களைவிடக் கூடுதலாக அதற்கு ஒன்றும் இல்லை. சில குரங்குகள் மனிதனைப்போலவே இருக்கின்றன. அவைகளெல்லாம் எம்மை நோக்கும்போது என் நண்பரை துப்பாக்கியுடன் தயாராகி இரும் என்று எச்சரிப்பேன்.

நாங்கள் கொண்டுவந்த பலகாரங்களை அவைகளுக்குத் தருமம் செய்தோம். அவைகள் ஒன்றோடொன்று குஸ்தி போட்டன. அக்குரங்கு சேஷ்டைகளை வேடிக்கையுடன் பார்த்துக்கொண்டிருக்கும்

போது ஒரு புஜபல பராக்கிரமசாலி வந்தார். அரையில் வேட்டி இல்லை. அவ்வருஷத்திற்கு முன்பு வந்த தீபாவளியன்று ஒருவேளை தவறி தண்ணீரில் விழுந்திருப்பார். அல்லது மழையில் நனைந்திருப்பார். அல்லாமல் அவர் குளித்ததற்குள்ள அறிகுறிகள் ஒன்றும் தென்படவில்லை. அவர் எங்களைக் கூர்மையாக கவனித்ததிலிருந்து ஒன்று தோன்றியது. "அந்த நாகரிக மலையில் இந்த வேட்டியும், சொக்காயும் அணிந்த அநாகரிகப் பேய்கள் எப்படி வந்துவிட்டன." ஆம்! வேட்டி கட்டாத ஊரில் வேட்டி கட்டியவன் பயித்தியக்காரன்தானே!

அம்மலையில் வாழும் 'காணிக்காரர்' என்ற ஒரு மலை வகுப்பைச் சார்ந்தவராம் அப் பேர்வழி. அவரும் விடவில்லை; ஒரு வேடிக்கை காட்டிவிட்டார். ஒரு கம்பை எடுத்து பலகாரங்களுடன் அக்குரங்குக் கூட்டத்தில் எறிந்துவிட்டார். அக்குரங்குகள் அக் கம்பைக் கொண்டு ஒன்றோடொன்று அடித்துக் கொண்டன. அவர் மேலும் எங்களுக்கு ஒரு புது உண்மையைத் தெரிவித்தார்.

## காணிக்காரன் சொன்ன கதை

அதாவது நல்ல பாம்பிற்கும், குரங்கிற்கும் சிறிது காயம் பட்டாலும் இறந்துவிடுமாம். நல்ல பாம்பிற்கு காயம் ஏற்பட்டால் அக் காயத்தில் ஈக்கள் வந்து மொய்க்கும். பாம்பு கோபம் அடைந்து, சீறி ஈக்களை கொத்துவதாக எண்ணி தன் காயத்திலே கொத்தி விடும். அவ்விஷம் தலைக்கேறி அப்பாம்பே எமலோகம் சென்றுவிடுமாம்.

இதுபோன்று குரங்கும் காயம் பட்டால், தன் கையால் அக் காயத்தை சொறிந்து சொறிந்து பெரிய புண்களாக்கிப் பின் இறந்துவிடுமாம். இது எம்மட்டு உண்மையோ!

மாசுவத்தியினின்றும் 12 மைல்களுக்கப்பால் 'முத்துக்குழி' என்ற ஒரு இடத்திற்குச் சென்று விட்டோம். அது பெரிய யானைக்காடு. எறும்புகள் ஊர்வதுபோல் காட்டு யானைகள் செல்லும் என்றார்கள். ஆனால் நாங்கள் இரண்டு யானைகளைத்தான் கண்டோம். அதுவும் நாட்டானைகள். அதாவது, அம்மலையில் தடிகளையும் மற்றும் பெரிய வேலைகளையும் செய்வதற் கென்று கொண்டுவரப்பட்டிருக்கின்றன. காட்டானை யைக் காணவே யில்லை.

யானைகள் நம்மைத் தொந்தரவு பண்ணவந்தால் அவைகளைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லக் கூடாதாம். ஏன்? கல்லைக்கூட அதன்மேல் எறியக் கூடாதாம். 'எலுமிச்சம்பழம் கிடைத்தால் அதன்மேல் எறிந்து கலைக்கவேண்டுமாம்' என்றிருக்கும் ஒரு விதியை அறிவித்தார் நம் காணிக்காரத் தோழர். அன்றிரவு அங்குள்ள அரசாங்க விடுதியில் தங்கினோம். விறகுக் கட்டைகளைச் சேர்த்து நெருப்புப்பற்ற அதில் குளிர்காய்ந்து கொண்டிருந்தோம்.

## குகன் விருந்து

இராமாயணத்தில் குகன் வருகிறான். இராமருக்கு வேண்டிய உதவிகள் புரிந்தான் என்பது நடந்ததோ! கதையோ! ஆனால் நான் குறிப்பிடும் காணிக்காரர் மிகவும் உதவியாயிருந்தார். எங்களை அவர் வீட்டிற்கு

விருந்திற்கு அழைத்தார். நாங்களும் சென்ருேம். செடிகளால் பின்னப்பட்ட குடிசை. மூங்கில் கதவுகள். எங்களுக்கு தேனும் தினைமாவும் மற்றும் கனிவர்க்கங்களும் தந்து வயறுபுடைக்க உண்ணும்படி வற்புறுத்தினர். வேண்டிய மட்டும் தின்றுவிட்டு மீதியை வீட்டிற்கும் கொண்டுவந்தோம். நாங்கள் அவ் உபசாரத்திற்குப் பதிலாக, சொக்காயும் வேட்டியும் கொடுத்தோம். பணம் கொடுத்து என்ன பயன்! அவரும் மிகவும் ஆவலுடன் வாங்கிக்கொண்டார்.

### தாழக்குடி தங்கல்

மலைகளைப் பார்த்து பின் அம்மலைகளின் பக்கத்தில் இருக்கும் தாழக்குடி என்னும் ஊருக்கு வந்திருந்தோம். தாழக்குடி ஒரு பெரிய ஊர். அவ்வூர் தலைவர்களில் ஒருவரும் திருவிதாங்கூர் மாஜி அசெம்பளி மெம்பருமான திரு. சின்னத்தம்பியா பிள்ளை அவர்கள் எங்களை வரவேற்று மிகவும் உபசரித்தார். மேலும் திருவிதாங்கூர் மத்திய ரோட் போர்டிலும் (Central Road Board) மெம்பராக இருந்தார். அவர் வீட்டிலேயே அன்றிரவு தங்கினேம். அவர் எங்கள் பால் காட்டிய பேரன்பை மறக்கவே முடியாது. மறுநாள் நாங்களும் அவருமாக பேச்சுப் பாறை எனும் அணைக்கட்டை பார்வையிடச் சென்ருேம்.

அவ்வணையின் நீர்ப்பெருக்குதான் நாஞ்சி நாட்டு நீர்வளத்திற்குப் பொறுப்புடையது. அங்கிருந்து பல கால்வாய்கள்மூலம் நஞ்சை நிலங்களுக்குத் தண்ணீர் கொண்டுவந்து விவசாயம் செய்து வருகின்றனர். திரும்பி வரும்போது பாண்டியன் அணை, முக்கூடல்

அணை முதலியவைகளையும் பார்வையிட்டோம். அம் முக்கூடல் அணையில் இருந்து தான் நாகர்கோவில் நகருக்கு தண்ணீர் குழாய்கள் வழியாக அனுப்பபப்படுகிறது.

**அரசியல் விசாரணைக் குறிப்புகள்**

சுற்றுப் பிரயாணம் ஓரளவாக முடிந்தபின் அரசியல் பொருளாதார சமூக விஷயங்களைக் குறித்து பலரிடம் கேட்டு அறிந்தேன். வண்டிக்காரன் முதல் தலைவர்கள் வரையில் ஒவ்வொருவரை விசாரித்தேன். அவர்கள் யாவரும் ஒரேமனதாக திவான் சர். சி. பி. ராமசுவாமி அய்யரின் ஆட்சித் திறமையை வெகுவாகப் புகழ்ந்தனர். அவர் அந் நாட்டிற்குச் செய்த நன்மைகள் பல.

வரிப் பிளவால் இடுப்பு ஒடிந்துகிடக்கும் விவசாயிகளின் நிலவரியை குறைத்துக் கொடுத்திருக்கிறார். விவசாயிகளின் பிரதிநிதிகளை நேரில் வரவழைத்து அவர்கள் குறைகளைக் கேட்டு, அவைகளுக்கு உடனே வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். மேலும் ஒவ்வொரு சிற்றூர்களுக்குச் சென்று பாமர ஜனங்களின் குறைகளைக் கேட்டு வருகிறார். இதற்குமுன்பு இவ்வளவு திறமைவாய்ந்த திவான் வந்ததில்லை. அரசாங்க காரியாலயங்களுக்கு திடீர் விஜயம் செய்து அதிகாரிகளின் தவறுதல்களை கண்டுபிடித்து உடன் தகுந்த தண்டனை கொடுத்துவருகிறார். அங்குள்ள அதிகாரிகள் மிகவும் கண்ணியமாக நடந்துவருகின்றனர். 'கைக்கூலி' லஞ்சம் அந்நாட்டில் இல்லவே இல்லை. சில வருஷங்களுக்கு முன்பு அந்

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
நூல் வரிசை எண். 1820

நாட்டில் எதற்கெடுத்தாலும் லஞ்சம் கொடுத்தாக வேண்டும். ஜனங்கள் வேடிக்கையாகச் சொல்வார்கள். "கோட்டிற்குச் சென்றால் அங்குள்ள ஒவ்வொரு தூண் கூட லஞ்சம் கேட்கும்" என்று. அந்தக் காலம் மலையேறி விட்டது.

இந்தியாவிலேயே நீளம் கூடிய சிமிண்ட் ரோடு திருவிதாங்கூரில் தான் இருக்கிறது. அவ் ரோடு வழியாக ஒருதடவையாவது சவாரி செய்தால்தான் அதன் இன்பத்தை அநுபவிக்க முடியும். அவ் ரோடின் அருமை ஏழை வண்டிக்காரர்களுக்கு அதிகம் தெரியும்.

திருவிதாங்கூர் அரசாங்கத்திலிருந்து மோட்டார் போக்குவரத்துகள் நடத்தி வருகிறார்கள். படித்த இளைஞர்கள் கண்டக்டர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பிரயாணிகளை உபசரித்து காரில் உட்கார வைப்பதே ஒரு அலாதி!

## மதப் புரட்சி

"கிருஸ்து மதத்தில் இருந்து ஆயிரக்கணக்கானவர் இந்துக்களாகி வருகின்றனர். ஹரிஜனங்கள் மிகவும் நாகரிகம் அடைந்து முன்னிலைக்கு வந்திருக்கின்றனர். ஜாதிமத பேதம் அறவே ஒழிந்துவருவது அந்நாட்டில் தான்." இதற்கெல்லாம் மூல காரணம் 'ஆலய பிரவேச விளம்பரம்' தான். இவ்வித சமூக திருத்தங்களில் இந்தியாவிற்கு அவர்கள் வழிகாட்டியாக யிருக்கிறார்கள். மேன்மைதங்கிய அரசர் அவர்களும், திவானும், பல தலைவர்களைப்போல் மேடைப் பிரசங்கத்தோடு நிறுத்திவிடவில்லை. செயலில் காட்டிய தீரத்தை போற்றாமல் இருக்கமுடியுமா? இதற்குத்

தான் எத்தனை எதிர்ப்புகள். இவைகளை சட்டை பண்ணுது, சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்த அரசரை என்னென்று கூறுவது. 'தென் நாட்டு அசோகன்' என்ற ஒரு வாக்கியத்தில் முடித்து விடட்டுமா ?

**சட்டசபையில் சி. பி.**

திருவிதாங்கூர் சட்டசபையில், அங்கத்தினர் கேட்கும் ஒவ்வொரு கிண்டல் கேள்விக்கும் பதில் அளித்திருப்பதை பத்திரிகை வாயிலாகப் பார்த்திருக்கிறேன். என்ன துடுக்கான பதில்! நினைத்த அளவில் பதில் கொடுப்பதென்பது அறைகுறை அறிவாளிகளால் முடியாது. நான் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருக்கும்போது ஆசிரியரிடம் ஒரு சந்தேகம் கேட்டேன். அக்கேள்விக்கு அவரால் பதில் அளிக்க முடியவில்லை. கோபமும் வந்துவிட்டது. "நாளைக்குப் பதில் கூறுகிறேன்" என்றார். ஆனால் இதுவரை அவர் பதில் கூறியதாக ஞாபகம் இல்லை. "நாளை நாளை என்பீராகில் நாளை என்றொரு நாளும் வரப்போவதில்லை." என்ற பழமொழியை என் சொந்த அனுபவத்தில் கண்டேன்.

சட்டசபையில் அங்கத்தினர்கள் கேட்ட கேள்விகளுக்கு திவான் அளித்த பதில்கள் ஒன்று இரண்டை மாதிரிக்காக எடுத்துக் காட்டுகிறேன்.

**அங்கத்தினர் :**—(கேள்வி) திருவிதாங்கூர் அரசாங்க மோட்டாரில் ஒரு நாள் ஏற நேர்ந்தது. மழையோ சோவென்று பெய்துகொண்டிருந்தது. காரில் ஏறினேன். காரிலுள்ள ஒழுக்குகள் என் துணிகளை நனைக்க

ஆரம்பித்தன. உடனே கையில் இருந்த குடையை விரித்துப் பிடித்திருந்தேன். அப்படி இருந்தும் துணிகள் நனைந்துவிட்டன. [திருவிதாங்கூர் அரசாங்க மோட்டார் நிர்வாகஸ்தர்களை வேண்டுமென்றே கிண்டல் பண்ண கேட்ட கேள்வி.]

**திவான் பதில்:**—இதிலிருந்து அங்கத்தினரின் குடையும் ஒழுக்குடையதாகவே இருந்திருக்கிறதெனத் தெரிகிறது.

இப்பதிலால் அங்கத்தினர் திகைப்படைந்து இருந்த இடம் தெரியாமல் மறைந்தார்.

வேறு ஒரு சந்தர்ப்பத்தில் கேட்ட ஒரு கேள்வியைக் குறித்து ஒருவர் கூறினர். அவர் கூறினதை ஆதாரமாக எழுதுகிறேன்.

**அங்கத்தினர்:**—காரில் சி. பி. நிர். (C. P. No.) என்று போடக் காரணம் என்ன? (அரசாங்க மோட்டார்களில் சி. பி. நிர். என்று போட்டிருக்கும். குறுகிய மனப்பான்மையோடு அந்த எழுத்துக்களைத் தவறுதலாக எண்ணிக் கேட்ட கேள்வியாகும்.)

**திவான் பதில்:**—சி. பி. என்பதற்கு மூன்று காரணங்கள் கூறினர். (i) சித்திராபிரசுனம். (ii) காமரின் பாசஞ்சர் (Comerin Passenger). (iii) கேப் முதல் பறவூர்வரை (Cape to Parur).

என்ன திட்டமான பதில் பாருங்கள். இது போன்று ஆயிரக் கணக்கான நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டலாம்.

'பொன்மலர் நாற்றமுடைத்து' என்றாற்போலத் திருவிதாங்கூர் வாசிகளுக்கு ஒரு அரசர் அவதரித்திருக்கிறார். அவரால் ஆக்கப்பட்ட திவானைக்குறித்து

கேட்கவா வேண்டும். அவர்களது உருவப் படங்களும் அவர்களது பெயரால் பல பொது ஸ்தாபனங்களும் தினமும் திறக்கப்பட்டு வருகின்றன.

### வஞ்சியில் நாஞ்சி

பண்டைக்காலச் சரித்திரத்தைப் புரட்டினுல் திருவிதாங்கூர் பூர்வீகத் தமிழ்நாடெனக் காணலாம். அந்நாட்டு அரசர் சேரர் மரபில் உதித்தவர். ஆனுல் இன்று அவைகளெல்லாம் கதைகள் போன்று விளங்கு கின்றன. திருவிதாங்கூர் நாட்டிற்கு வஞ்சி நாடென்று மற்ெருரு பெயரும் உண்டு.

'நாஞ்சி நாடு' என்று பெயர்வர பல காரணங்கள் கூறுகிருர்கள். 'நாஞ்சிக் குறவன்' என்ற ஒரு அரசன் அந்நாட்டை ஆண்டுவந்தானும். பின் அவனது பெய ராலே அந்நாடு வழங்கப்பட்டு வருகின்றது எனக் கூறுகின்றனர் சிலர். நாஞ்சி என்ருல் ஒருவிதக் கலப்பையாம். அந்த 'நாஞ்சி' கலப்பையால் பயிர் தொழில் நடத்தப்படுவதால் நாஞ்சிநாடென்று வந்தது எனப் பலர் கதைக்கின்றனர். அதெல்லாம் சுத்த 'ஹம்பக்' நஞ்சை நிலங்களை அதிகமாகக் கொண்ட தால் நாஞ்சிநாடு என்று வந்திருக்கிறது எனச் சாதிக் கின்றனர் புது உலக இளைஞர்கள். நாம் பெயருக்காக ஏன் இப்படி போராடவேண்டும். எப்படி வந்தால் என்ன? என ஒரு சார்பார். அந்த ரகமே எனக்குப் பிடித்தது. அதுபற்றி மேல் விசாரணை நடத்தவில்லை.

### தாய்மொழி தமிழே

நாஞ்சி நாட்டு ஜனத்தொகை சுமார் 2¼ லட்சம். 2¼ லட்சமும் சுத்த வடிகட்டின தமிழர்களே. திருவிதாங்கூர் சட்டசபையைப் பொறுத்தவளவில் இவர்களுக்குச் செல்வாக்குக் கிடையாது. 'மைனுரிட்டி' 'மைனுரிட்டி' எனக் கத்துகின்றனர்களே அப்பிரச்சனை இவர்களையும் விட்டதில்லை. ஆனுல் 'பாகிஸ்தான்' போல் 'நாஞ்சிஸ்தான்' என்று கதறவில்லை. கதறப்போவதுமில்லை. சர். சி. பி. இருப்பதால் அவர்களது பிரச்சனைகள் தகர்ந்து வருகின்றன. இனியும் அவர்களுக்குப் பல பிரச்சனைகள் தீரவேண்டி யிருக்கின்றன.

அரசாங்கக் காரியாலத்தோடு தொடர்பு வைக்க மலையாளம் வேண்டியிருக்கிறது. கோர்ட்டு நடவடிக்கைகள் யாவும் மலையாளத்தில் தான். தன் குறைகளைத் தாய் மொழியில் எடுத்துக்கூறத் தெரியாது விழிக்கிருன் தமிழன். பேசத் தெரிந்த ஊமையாக இருக்கிருன்.

### தலை நிமிர் தமிழா!

திருவிதாங்கூர் பல்கலைக் கழகத்தில் தமிழருக்கென்று ஒரு பரீக்ஷை வைத்திருக்கிருர்கள். அதில் மலையாளத்தையும் கட்டாய பாடமாக வைத்திருக்கிருர்கள். ஆகவே தமிழில் பாண்டித்தியம் பெற மலையாளம் அவசியம் படிக்கவேண்டி யிருக்கிறது. ஆனுல் மலையாளத்தில் பாண்டித்தியம் பெற தமிழ் படிக்கவேண்டிய அவசியம் இல்லையாம். இந்த முறையை உடன் எடுத்துவிட வேண்டும்.

இக்குறைகளையெல்லாம் எடுத்துக் கூற பிரதி நிதிகள் இல்லாமலில்லை. அவர்கள் பெயரளவில் அங்கத்தினர்களே தவிர அங்கு சென்று சாதிக்கும் காரியம் ஒன்றும் இருக்காது. அவர்கள்தான் 'மைனு ரிட்டி'யாக இருக்கிறார்களே! நாற்காலிகளை காலியாக இருக்காமல் செய்ய முடியுமே தவிர வேறொன்றும் முடியாது. வேண்டுமானால் அடுத்தவர்கள் கைதூக்கு வது பார்த்து கைதூக்கலாம். தவறி ஏதாவது பிரே மேயம் கொண்டுபோனாலும் அது பரிதாபகரமான தோல்வி அடையும்.

**தொழில் வளர்ச்சி**

நாஞ்சிநகர் நாகர்கோவில் வாசிகளில் பலர் வள்ளுவர் போற்றும் நெசவுத் தொழிலையே குலத் தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். 'கோட்டாறு நெசவு' மிகப் பிரசித்தி பெற்றது. கோட்டாறு என்பது நாகர்கோவிலுள்ள ஒரு பகுதியாகும். வட சேரியிலும் நெய்தல் வேலை பிரமாதமாக வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது. துணிகளுக்கு சாயமும் போடுகிறார்கள். நாகரிக பட்டு புடவைகளும் நெய் கிறார்கள். அவர்கள் இவைகளை எல்லாம் குடிசைத் தொழில்களாக வைத்திருக்கிறார்கள்.

பாத்திரங்கள் செய்வதும் அங்கு நடைபெறும் தொழில்களில் ஒன்று. வெண்கலப் பாத்திரங்கள், செப்புத்தகடு பாத்திரங்கள் செய்வது முதலியவைகள் மிக முன்னேற்றம் அடைந்து வருகின்றன.

வியாபாரமும் மிகச் செழிப்பாக நடைபெறுகிறது. ஒரு முக்கிய மார்க்கெட் இங்கு இருக்கிறது. பிரிட்டிஷ்

இந்தியாவில் இருந்து ஏராளமான சரக்குகளே வர வழைத்து வியாபாரம் செய்கின்றனர். பெரிய பெரிய மளிகைக் கடைகளும் மற்றக் கடைகளும் ஏராளமாக இருக்கின்றன. ஹோட்டல்களுக்கும் குறைவில்லை.

சிறிய வெற்றிலைப்பாக்குக் கடைகளிலும் குறைந் தது 20 பழக்குலைகளாவது தொங்கிக்கொண்டிருக்கும். அவைகள் பலவகை வர்க்கங்களாகவும் இருக்கும். பார்ப்பதற்கு கண்ணைப் பறிக்கும்.

### சமூகச் சீர்திருத்தம்

அங்குள்ள இந்துக்களின் நடவடிக்கைகள் யாவும் மற்ற நாட்டு இந்துக்கள்போலவே இருக்கின்றன.

வயது முதிர்ந்த ஒரு கிழவர் எவ்வளவு பணம் உடையவராக இருந்தாலும் அவரைக் கவனிப்பதற்கு பொறுப்புள்ள ஆள் இருக்காது. காப்பி கேட்டால், சாப்பாட்டு சமயத்தில் காப்பி வரும். பின், மாலையில் சாப்பாடு வரும். ஆனால் அவர் இறந்த அன்று பார்க்க வேண்டும் வேடிக்கையை! பெரிய மேளக்களில் மேள தாளங்களோடு பிரேதத்தை ஊர்வலம் நடத்துவது தடபுடலாக இருக்கும். அவர் இறந்ததினம் முதல் பதினாறுநாள் வரையிலும் ஒரே விருந்துதான்.

"கலியாணத்தைக் கழித்துப் பார். வீட்டைக் கட்டிப் பார்" என்றொரு பழமொழியுண்டு. அங்குள்ள ஒருவராவது தன் நிலைமைக்குத் தக்க கலியாணச் செலவு செய்ததில்லை. ரூ. 500-க்குத் திட்டம் போட் டார்களானால் ரூ. 1500-ல் நிற்பது அவர்கள் அதிர்ஷ்ட மாக இருக்கலாம். இந்த ரூபாய் அவரிடம் இருக்காது. வேறு ஒருவரிடத்தில் வட்டிக்கு வாங்கி இருப்பார்.

அதற்குள்ள் வட்டியும் ஏறி பெரிய தொகையாகிவிடும். கலியாணத் தம்பதிகள் வயோதிகரான பின்னும் வட்டி செலுத்திக் கொண்டிருப்பார்களே ஒழிய கடன் தீர்ந் திருக்காது.

கலியாண வீட்டில் மாப்பிள்ளை வீட்டாருக்கு தனி கௌரவம். அன்று அவர்களது அதிகாரந்தான். பெண் வீட்டார் அவர்கள் ஏதேனும் கேட்கும்முன் ஒன்றுக்கு பத்தாகக் கொண்டுவந்து கொட்டுவார்கள். மாப்பிள்ளை வீட்டார், பெண் வீட்டாரின் இரத்த உறவில் உள்ளவர்களானலும் சரி. அன்று ஒரு நிலை தான் நிற்பார்கள். இது ஒரு பரிதாபகரமான விஷயம்.

கலியாணம் முடிந்துவிட்டது. யாவரும் அவரவர் வீட்டிற்குச் சென்றுவிடுவர். கலியாண விஷயத்தில் ஆயிரம் தூஷணை கூறுவர். அது மோசம்; இது சொத்தை என்பார்கள்.

ஆனல் கலியாணம் நடத்திய ஆசாமி தலையில் கைவைத்து கடனைத் தீர்க்கும் யோசனையில் ஆழ்ந்து விடுவார். அத்தீரா யோசனையே அவருக்கு எமனாக முடியும்.

### பெண் கல்வி

நாஞ்சி நாட்டு பெண் கல்வி அபிவிருத்தியும் முன் னேற்றம் அடைந்து வருகிறது. அங்கு இரண்டு உயர் தர பெண் பாடசாலைகள் இருக்கின்றன. 'சட்டி பானை கழுவவே பெண்கள் பிறக்கிறார்கள்' என்று இருந்த மூட நம்பிக்கை மாறி பெண்கள் படித்து பட்டம் பெற முன் வந்து விட்டார்கள்.

தேரூர் திரு. திரவியம் பிள்ளை அவர்கள் மகள் திருமதி. பொன்னம்மாள் ஒரு எம். ஏ. சென்னை சர்வ கலாசாலையில் இருந்து பட்டம் பெற்றார்கள். இன்னும் சில பெண் பி. ஏ.க்களும் இருக்கிறார்கள்.

## நாகர்கோவில் கடைசி முற்றுகை

பார்க்க வேண்டிய இடங்கள் யாவும் பார்த்து விட்டோம். காண வேண்டியவர்களைக் கண்டு விட்டோம். ஆகவே நாகர்கோவில் நகர பிரமுகர்கள்மீது ஒரு திடீர் படையெடுப்பு நடத்திவிட்டு நகரைக் காலி செய்வோம் என்று தீர்மானித்து விட்டோம். முதலில் நகரசபை மாஜித்தலைவர் திரு. சிவதாணு பிள்ளை வீட்டிற்குச்சென்றோம். அவர் நாஞ்சிநாட்டு வீரராம். திருவிதாங்கூர் அசெம்பளியில் 'சக்கைபோடு' போட்டு நியாயத்திற்காக போராடுபவராம். அவர் எங்களிடம் பல அரசியல் உண்மைகளை வெளியிட்டார்.

அடுத்தபடியாக 'பயனீயர் மோட்டார் சர்வீஸ்' என்ற ஒரு பெரிய மோட்டார் கம்பெனியின் உரிமையாளர் திரு குமாரசுவாமி அவர்களைக் குறித்து ஒரு சில வார்த்தை. அவர்கள் தன் சொந்த முயற்சியால் உயர்ந்தவர். பெருந்தன்மைக் குணம் நிறைந்தவர். அவரது வாழ்க்கைச் சித்திரமும் அமெரிக்க போர்ட் கம்பெனி முதலாளி ஹென்றிபோர்டின் வாழ்க்கைச் சித்திரமும் ஒன்றுபோலவே இருக்கிறது. அவரால் பல குடும்பங்கள் பட்டினியின்றி வாழ்க்கை நடத்துகின்றன. முதலாளி, தொழிலாளி என்ற வேறுபாடு அவர் கம்பெனியில் கிடையா. அவரும் தொழிலாளியாக இருந்தவரல்லவா ?

## டி. கே. எஸ். சகோதரர்கள்

பூவும் மணமும் போலவும், நகமும் அதன் சதையும் போலவும் என்றெல்லாம் கதைகளில் அளக்கிறார்கள். ஆனால் டி. கே. எஸ். சகோதரர்கள் நால்வரின் ஒற்றுமை அவைகளை எல்லாம் கடந்துவிட்டது. அவர்களது கொடி, தமிழ்நாட்டு நாடக உலகில் வெற்றிச் சின்னத்துடன் பறக்கிறது. என்ன என்ன பட்டங்கள்! எவ்வளவு பரிசுகள்! அவர்களும் நாகர்கோவிலைச் சேர்ந்தவர்களே!

சகோதரர்களில் நடிப்பிற்கென்று பிறந்தவர் அன்பர் டி. கே. ஷண்முகம். 'பம்பாய் மெயில்', 'குமாஸ்தாவின் பெண்' முதலிய நாடகங்கள் பார்த்தவர்களுக்கு இது நன்கு விளங்கும். ஔவையார் என்ற நாடகத்தை இப்பொழுது நடித்து வருகிறார்கள். மிக நேர்த்தியாகவும், உண்மை உணர்ச்சி பாவத்துடனும் சித்தரித்திருக்கிறார். இலக்கிய கர்த்தர்களுக்கு இதைவிட வேறு என்ன பணி செய்யமுடியும்.

சகோதரர்கள் பல புத்தக வெளியீடுகள் வெளியிட்டு வருகின்றனர். அவர்கள் இசை, இயல் நாடகம், மூன்றிற்கும் பெரும் சேவை செய்துவருகின்றனர். இவ்வளவு தொண்டுகள் புரியும் ஒரு கம்பெனிக்கு ஏன் தமிழ் நாட்டார் முத்தமிழ் கலாவித்வரத்ன என்ற பட்டத்தை அளிக்கமாட்டார்கள்!

அவர்களின் நாடகக்கலை வெற்றி மேன்மேலும் சிறப்பு அடைந்து வெளி நாடுகளிலும் தமிழர் சார்பாக பெருமையை நிலைநாட்டும் காலம் நம்மை எதிர் நோக்கி நிற்கிறது என்பது திண்ணம்.

நாஞ்சி நாட்டு கிருஷிகர் சங்கத்திற்கும், ஹரிஜன் சேவா சங்கத்திற்கும், நாடகம் நடித்து பணம் வசூல் செய்து நன்கொடையாக அளித்ததிலிருந்து அவர்களின் பொதுநல மனப்பான்மை ஒவ்வொரு நாஞ்சி நபரின் மனதிலும் புகுந்து பூரிப்படையச்செய்கிறது.

## நாள் ஒன்றுக்கு நானூறு கவி

திடீரென்று தமிழ் கடவுள் நாஞ்சி நாட்டில் முகாம் அடித்து கீழ்கண்ட உத்தரவை போடுகிறார் என்று வைத்துக்கொள்வோம்.

அதாவது "ஒரு நாளையில் சுமார் 300 முதல் 400 பாட்டுகள் வரை இயற்றும் ஆற்றல் உள்ளவர்களைத் தவிர மற்றவர்கள் நாஞ்சி நாட்டை விட்டு 24 மணி நேரத்தில் காலி செய்யவேண்டும்"

அப்பொழுது ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் மூட்டை முடிச்சுகளை எல்லாம் கட்டிவிட்டு புறப்பட்டு விடவேண்டியதுதான். அந்த ஒரு சிலரின் தலைவர் திரு. செய்கு தம்பி பாவலர் அவர்கள். சுமார் 28 ஆண்டுகளுக்கு முன்பு 'தசாவதானி' என்னும் பட்டத்தைப் பெற்றார்.

## தோழர் ஜீவானந்தம்

'நெற்றிக் கண்களை திறப்பினும் குற்றம் குற்றமே' என்றார் நக்கீரர் சோமசுந்தரக் கடவுளின் முன்னிலையில். நாட்டு நலனுக்காக எது வந்தாலும் சரி என்றொரு தியாகி இருக்கிறார். அவரது வாழ்வு ஒன்றில் ஜெயில். அல்லது ரெயில். சென்னைக் கடற்

கரையில் பாடும் ரேடியோவிற்குப் போட்டியாக பேசி, கூட்டத்தின் கவனத்தை இழுக்க அவர் ஒருவரால் தான் முடியும்.

மூன்று அல்லது 30 மணி நேரமானுலும் சளேக்காது பேசுவார். பேச்சுகளில் இனிய தமிழ் சொற்கள், சொல்லடுக்குகள், தகுந்த எடுத்துக் காட்டுகள், வேதாந்திகூட அவரிடம் உபதேசம் பெறவேண்டிய காரியங்கள் பல உண்டு. எழுதிக்கொண்டே போகிறீரே. அவர் யார்? அவர்தான் பொதுவுடமைத் தோழர் ஜீவானந்தம். மறந்துவிட்டேனே! அவர் பிறந்த ஊர் நாஞ்சி நாட்டைச் சேர்ந்த பூதப்பாண்டியாகும்.

**கல்லூரிகளிலே**

சென்னே மாகாணகல்லூரியில் ஆசிரியராக இருந்த திரு. கனகசபாபதி பிள்ளேக்கும் ஊர் நாகர்கோவில் தான். தற்பொழுது பல்கலேக் கழகத்தில், சரித்திர ஆராய்ச்சி இலாகாவில் இருக்கிருர். நாஞ்சி நாட்டைக் குறித்து உள்ள பூரா விவரங்களும், சரித்திர ஆதாரங்களுடன் அவரால் வெளி வரப்போகிறது.

சென்னே முகமதியர்கள் கல்லூரியில், ஆங்கில போதகராக இருக்கும் மகமது கனியும் நாகர்கோவிலில் இருந்து வந்தவரே.

**நாஞ்சிநாடே வணக்கம்!**

மறுநாள் காலே திருவனந்தபுரம் செல்ல ஏற்பாடு செய்துவிட்டோம். நாங்கள் வந்த காரியங்கள் யாவும் வெற்றிகரமாக முடிந்து விட்டதல்லவா? குசேலர்

கதையில் குறிப்பிடும் 'அவலில்' கொஞ்சம் வாங்கி பொட்டணம் கட்டினேம். பப்படம் 'அப்பளாம்' ரொம்ப விசேஷம் என்ருர்கள். அதிலும் கொஞ்சம் வாங்கினேம்.

கோழி கூவியது; பொழுது புலர்ந்தது. கோழி கூவியதால் பொழுது புலர்ந்தது என்று பொருள் திரித்து விடாதீர்கள். கார் ஹோட்டல் வாசலில் வந்தது. சாமான்களெல்லாம் காரில் ஏற்றினேம். நாஞ்சிநாட்டு தலைநகர் நாகர்கோவிலுக்கு வணக்கம் செலுத்திவிட்டு, வேண்டா வெறுப்புடன் திருவனந்த புரம் புறப்பட்டோம். போகும் வழியில் வில்லுக்குறி என்ற இடத்தில் இறங்கி "இரட்டைக்கரைச்சானல்" என்ற கால்வாயைப் பார்த்துவிட்டுச் சென்ரும். அக் கால்வாய் ஒரு கோட்டைமாதிரிச் செல்கிறது.

ஆற்றின் பாலம் வழியாக ரோடுகள் செல்வது சகஜம். ஆனல் ரோட்டில் பாலம்போட்டு அதன் வழியாக அந்த ஆறு செல்கிறது. பின்னர் பத்மனப புரம் இறங்கி அங்குள்ள பழைய கோட்டைகளையும் பார்வையிட்டுவிட்டு, மாலை மணி மூன்றுக்கு அனந்தை அடைந்தோம்.

இதன் பிறகு உள்ள சுற்றுப்பிரயாண விளக்கம் தயாராகும் அடுத்த புத்தகம் விவரிக்கும்.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1820
நன்கொடை எண்: 1820
காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்

தந்தி: எவரெஸ்ட் டெலிபோன்: .894

சென்னைக்கு வரும் அதிதிகளின் நண்பர்




எவரெஸ்ட் சுந்தரம் தனது

# ஹோட்டல் எவரெஸ்டை

(போர்டிங், லாட்ஜிங்)

**உங்கள் சேவைக்கும் திருப்திக்குமாக இன்னும் 110 விசாலமான**

**அ... கைளுடன் விரிவுப்படுத்தி யிருக்கிறார்**

கலைவள்ளல் சுந்தரம் இந்த ஹோட்டலை தென்னிந்தியாவிலேயே மிகச் சிறந்ததாக
செய்திருக்கிறார். காற்றோட்டமுள் அறைகள், சுகாதார வசதிமிகுந்த
இ ம். எம். எஸ் டு, எஸ். ஐ. ஆர். ரயில்வே
ஸ்டேஷன்க உள்ள கம்பீரமான இடம்

**ல்லோருக்கும் தெரியும்**

**ர்பார்க்கப்படுகிறது**